## மேனிலை இரண்டாம் ஆண்டு

## அரசியல் அறிவியல்

### மாதிரி வினாத்தாள் – 3

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

### பகுதி - அ

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20 X 1 = 20

1. ‘அரசு என்பது சமூகம் என்ற தோரண வாயிலின் முக்கிய கல்’ என்று கூறியவர் யார்?
   (அ) பைனர் (ஆ) லாஸ்கி
   (இ) கார்னர் (ஈ) T.W. கென்ட்

2. மக்கள் நல அரசு குறித்த சிந்தனை முதன்முதலில் வேரூன்றிய நாடு எது?
   (அ) இங்கிலாந்து (ஆ) ஸ்வீடன்
   (இ) டென்மார்க் (ஈ) நார்வே

3. சமுதாய ஒப்பந்தக் கொள்கைக்கு ஆதரவு தெரிவித்தவர்
   (அ) ஜென்க்ஸ் (ஆ) மார்கன்
   (இ) ரூஸோ (ஈ) சர்ஹென்றிமெயின்

4. ‘சிவில் அரசாங்கம்’ என்ற நூலை எழுதியவர்
   (அ) ஹாப்ஸ் (ஆ) லாக்
   (இ) ரூஸோ (ஈ) அரிஸ்டாட்டில்

5. ஜான் போதான் என்ற தத்துவஞானி எந்த நாட்டைச் சார்ந்தவர்
   (அ) பிரெஞ்சு (ஆ) இத்தாலி
   (இ) ஜெர்மனி (ஈ) ஸ்பெயின்

6. வருமான வரியைச் செலுத்துதல் என்பது எதனைக் குறிக்கின்றது?
   (அ) பாரம்பரிய ஆளுமையை (ஆ) பகுத்தறிவுச் சட்ட ஆளுமையை
   (இ) தலைமைப் பண்பு ஆளுமையை (ஈ) மேற்கூறிய ஏதுமில்லை

7. கோக்கோ- கோலா என்பது
   (அ) பொதுத்துறை நிறுவனம் (ஆ) தனியார் நிறுவனம்
   (இ) பன்னாட்டுத் தேசக் கழகம் (ஈ) வரையறைக்கு உட்பட்ட கம்பெனி

8. “இந்தியக் கலாச்சாரம் மிகவும் பலம் வாய்ந்தது” என்று கூறியவர்
   (அ) A.V.டைசி (ஆ) அமர்த்தியா சென்
   (இ) பீட்டர் டிரக்கர் (ஈ) ஹட்டிங்டன்

9. தலைவர் முறை அரசாங்கம் எந்த நாட்டில் பின்பற்றப்படுகிறது?
   (அ) அமெரிக்கா (ஆ) இங்கிலாந்து

(இ) சுவிட்சர்லாந்து (ஈ) பிரான்ஸ்

10. ‘கூட்டாட்சி’ என்ற வார்த்தை எம்மொழியிலிருந்து பெறப்படுகிறது?

(அ) இலத்தீன் (ஆ) பிரெஞ்சு

(இ) ஹிந்தி (ஈ) சமஸ்கிருதம்

11. ‘சட்டங்களின் உயிர்’ என்ற நூலை வெளியிட்டவர்

(அ) லாஸ்கி (ஆ) கார்னர்

(இ) மாண்டெஸ்கியூ (ஈ) அரிஸ்டாட்டில்

12. கீழ்வரும் நாடுகளில் நீதிபதிகளைச் சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கும் முறை எங்குள்ளது?

(அ) பிரான்ஸ் (ஆ) சுவிட்சர்லாந்து

(இ) இங்கிலாந்து (ஈ) இந்தியா

13. மக்களவையின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை

(அ) 552 (ஆ) 545

(இ) 500 (ஈ) 550

14. இந்திய அரசியலமைப்புப் பேரவையின் தலைவர்

(அ) டாக்டர் இராஜேந்திரபிரசாத் (ஆ) B.R.அம்பேத்கர்

(இ) காந்தி (ஈ) நேரு

15. உயர்நீதிமன்ற நீதிபதிகள் யாரால் நியமிக்கப்படுகிறார்கள்

(அ) பிரதம மந்திரி (ஆ) ஆளுநர்

(இ) குடியரசுத்தலைவர் (ஈ) முதலமைச்சர்

16. நீதிப் பேராணைகள் எண்ணிக்கை

(அ) இரண்டு (ஆ) மூன்று

(இ) நான்கு (ஈ) ஐந்து

17. 73-வது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு

(அ) 1950 (ஆ) 1947

(இ) 1992 (ஈ) 1977

18. பஞ்சாயத்து சமிதியின் தலைவர் தமிழ்நாட்டில் எவ்வாறு அழைக்கப்படுகிறார்

(அ) சேர்மன் (ஆ) பிரமுகர்

(இ) பிரதான் (ஈ) மேயர்

19. இந்திய அரசாங்கம் புதிய விவசாயக் கொள்கையை அறிவித்த ஆண்டு

(அ) 1982 (ஆ) 1992

(இ) 2000 (ஈ) 2004

20. நிர்வாக சீர்திருத்த ஆணையத்தின் தலைவர்

(அ) நேரு | (ஆ) மொரார்ஜி தேசாய்

(இ) காந்தி | (ஈ) ஏ.பி.ஜே.அப்துல்கலாம்

## பகுதி – ஆ

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 30-க்கு கட்டாயம் விடை தரவும்** **7 X 2 = 14**

21. அரசின் வகைகள் யாவை?

22. அரசின் தோற்றத்தை விளக்கும் கொள்கைகள் யாவை?.

23. ஆளுமையின் மூன்று வகைகளை கூறுக

24. இறைமையின் பிரிவுகள் யாவை?

25. ஓரவைமுறை என்றால் என்ன?

26. நீதி மறு ஆய்வு - வரையறு.

27. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் யாவை?

28. கிராம நிர்வாக அலுவலர் பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.

29. தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள் யாவை?

30. வறுமை என்றால் என்ன?

## பகுதி – இ

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி, வினா எண் 31-க்கு கட்டாயம் விடையளிக்கவும்** **7 X 3 = 21**

31. நகர அரசினை வரையறு

32. தாய்வழிக்கொள்கை – விளக்குக.

33. உயர் வகுப்புக் கோட்பாடு என்றால் என்ன?

34. திறந்த பொருளாதாரம் - விளக்குக.

35. கூட்டாட்சி – விவரிக்க

36. நீதிபதிகளாவதற்கான தகுதிகள் யாவை?

37. நாடாளுமன்றக் கூட்டத்தொடர்கள் – விளக்குக.

38. சட்டசபைத் தேர்தலில் போட்டியிடுவோருக்கு இருக்கவேண்டிய தகுதிகள் யாவை?

39. நகரீயம் என்பதை விளக்குக.

40. இந்திய விவசாயக் கொள்கையை விளக்குக.

### பகுதி – ஈ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7 X 5 = 35

41. மக்கள் நல அரசை நிறுவுவதில் உள்ள சிக்கல்களை விளக்குக.

(அல்லது)

சர் ஹென்றி மெயின் கொள்கையை விளக்குக.

42. ஓரவை மற்றும் ஈரவை முறைகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளை எழுதுக.

(அல்லது)

தற்கால சர்வாதிகாரம் பற்றி விளக்கு எழுதுக.

43. நீதிமறு ஆய்வின் நிறைகுறைகளை எழுதுக.

(அல்லது)

நீதிபதிகள் நியமன முறை பற்றி விளக்குக.

44. அடிப்படைக் கடமைகள் பத்தினை எழுதுக.

(அல்லது)

மக்களவையின் அமைப்பைப் பற்றி விவரி.

45. மாவட்ட ஆட்சித்தலைவரின் பணிகள் பத்தினை எழுதுக.

(அல்லது)

முதலமைச்சரின் அமைச்சரவை தொடர்பான பணிகளை எழுதுக.

46. இராணுவக்கூட வாரியங்கள் பற்றி விவரிக்க

(அல்லது)

நகராட்சியின் கட்டாயமான பணிகளை மட்டும் எழுதுக.

47. இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்கள் விவரிக்க.

(அல்லது)

இந்தியாவின் பொருளாதார மேம்பாட்டை விவரிக்க